1982 ஏப்ரல் 5]

நொய்யல் ஆற்றிலிருந்து மின் பம்பு செட் மூலம் தண்ணீர் இறைக்க அனுமதி வழங்கும் திட்டம்.

*வினா எண் 766 திரு ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி; மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நொய்யலாற்றில் தண்ணீர், ஆயில் என்ஜின் மூலம் எடுக்கும் விவசாயிகளுக்கு மின் பம்புசெட் மூலம் தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதி வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. இதுபற்றி அரசு பரிசீலனை செய்துவருகிறது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொய்யலாற்றில் தண்ணீர் ஆயில் என்ஜின் மூலம் எடுக்கும் விவசாயிகளுக்கு டீசல் கிடைக்காத காரணத்தாலும், டீசலின் விலையேற்றத்தாலும் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அதைக் கருத்தில் கொண்டு விரைவில் அவர்கள் பம்ப்செட் வைத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அது குறித்து அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கின்றது.

திரு. கோவைத் தம்பி. மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நொய்யலாறு, அமராவதியாறு போன்ற பகுதிகளில் கோவை, பெரியார் மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான சிறு விவசாயிகள் பல ஆண்டுக்காலமாக அன்—ஆதரைஸ்ட் மோட்டார்ஸ் என்ற வகையிலே அந்த மோட்டார்களை வைத்துக்கொண்டு தண்ணீர் இறைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளி ஏற்றும் விதத்தில் சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோடு பகுதியில் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த மின் விசை மோட்டார்களுக்கு அரசு அங்கீகாரம் கொடுத்திருக்கின்றது, அதே நிலையினை அமராவதி, நொய்யலாற்றிலும் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் 1950 ஆம் ஆண்டில் உணவு உற்பத்தி இயக்கம் காரணமாக பல்வேறு பகுதிகளில் இப்படி அங்கீகாரம் பெறாமலேயே பாசனவசதியை அவர்களாகவே செய்து கொண்டிருக்கக்கூடிய நிலைமையை ஒவ்வொரு கட்டத்திலும் அரசாங்கம் முறைப்படுத் தியிருக்கிறது. அதன்படி 1955 இல் ஒரு முறையும் 1962ல் ஒரு முறையும் அவைகளை முறைப்படுத்தி அனுமதி கொடுத்திருக்கிறோம். அதற்குப் பிறகும் இப்போது பல்வேறு பகுதிகளில், குறிப்பாக நொய்யலாறு, அமராவதிப் பகுதிகளில், இது முறைப்படுத்தப்பட வேண்டுமென்று விவசாயிகள் பெரிய அளவிற்கு அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அரசாங்கம் ஏற்கனவே சேலம்

மாவட்டத்தில் ஒரு முடிவை எடுத்ததைப்போல் இதையும் செய்யலாமா என்பதை இப்போது மனிதாபிமானத்தோடு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: இந்த நொய்யலாற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு நீர்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் மனிதாபிமானத்தின் அடிப்படையில் பரிசீலிப்பதற்காகக் கூறினார்கள். இருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் வருவாய்த் துறை அதிகாரிகள் நிர்ப்பந்தமாக அந்த விவசாயிகளுக்கு பல்வேறுவிதத்தில் இடையூறாக இருக்கிறார்கள். ஆகவே அதையும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இதுவரை நிர்ப்பந்தித்து அல்லது அவர்கள் நீரேற்று பாசன முறைகளைக் கையாளக் கூடாது என்று சட்டப்படி தெரிவித்தாலும் அதையும் மீறி விவசாயிகள் இப்போது நீரைப் பயன்படுத்தி வருகிறார்கள். அதற்காக, பயன்படுத்தக்கூடாது என்று கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதில்லை. ஒரு பெனல்ட்டி மாதிரி, ஒரு குறிப்பிட்ட தொகை வசூல் செய்கிறோம் என்றளவிற்கு இருக்கிறதே தவிர அந்த நீரை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று இதுவரை கட்டாயப்படுத்தவில்லை. இருந்தாலும் அதையும் முறைப்படுத்திவிடலாமா என்பதுபற்றி இப்போது அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

பாசன வாரியம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 767—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளங்கள், ஏரிகள், அணைக்கட்டுகள் ஆகியவைகளின் பாசன வசதிகளை ஒழுங்குபடுத்த பாசன வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பாசன வாரியம் என்ற தனிப்பட்ட அமைப்பை ஏற்படுத்தலாமா என்பது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: கடல் நீரைக் கொண்டு பாசனம் செய்யலாம என்று சோவியத் யூனியன் விஞ்ஞானிகளும் ஜப்பான் நாட்டு விஞ்ஞானிகளும் ஆராய்ச்சி செய்து அறிவித்திருக்கிறார்கள். அதன்படி, கடல் நீரைக்கொண்டு பாசனம் செய்யும் முறையை இந்த வாரியம் மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: வாரியம் இன்னும் வரவில்லை. அது வந்ததற்குப் பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. இரா. தாமரைககனி: காவிரியையும் கங்கையையும் இணைக்கும் திட்டத்திற்கு முன்னோடியாக குறைந்தபட்சம் தமிழ்நாட்டிலுள்ள ஆறுகள் அனைத்தையும் இணைக்கும் திட்ட பரிசீலிக்கப்படுமா?